2011 செப்டம்பர் 14] [திரு. ம. கலை அரசு]

பிற்பகல் 2-20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியின்போது அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாத ...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தலைவரைப்போலவே, அவர் வெளியில் இருந்து ஒரு நிழல் வரவு-செலவுத் திட்டத்தை அறிவித்து, ஒரு சட்டமன்றத்தையே நடத்திவிடுகிறார். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரோக்கியமாக இருக்குமென்று சொல்கிறார். நல்ல திட்டங்களைக் கொண்டுவருகின்றபோது இங்கே குரல் வாக்கெடுப்பிலே நிறைவேற்றப்படுகிறது. எல்லா திட்டங்களையுமே நிலைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லையென்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கடந்த ஆட்சியின்போது அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாத சட்டமன்ற ஆவணங்களை* Digitalisation— *அறிவியல் ரீதியாக ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள், இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றபோது, எல்லா அலுவலகங்களுக்கும் இணையதளங்களை உருவாக்கினார். முதன்முறையாகப் பொறுப்பேற்றபோது, 1-3-1993 இல் கணினிமயமாக்கினார். அதேபோல், 1-3-2005 இல் சட்டமன்றப் பேரவைக்கு புதிய வலைதளத்தைத் தொடங்கி வைத்தார். தற்போது, மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்,* Digitalisation *முறையையும் தொடங்கி வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைப்பற்றிய புத்தகங்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைகள் அடங்கிய புத்தகங்களெல்லாம் காணாமல் போய்விட்டிருக்கின்றன. ஆவணக் காப்பகத்திலும் சரி, கன்னிமாரா நூலகத்திலும் சரி, காணப்படவில்லை. எங்களைப்போன்ற புதிய உறுப்பினர்களுக்கு அந்தப் புத்தகங்களெல்லாம் அளித்தால் சட்டசபையிலே உரையாற்றுவதற்கு சிறப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எந்தப் புத்தகங்கள் காணாமல் போயிருக்கின்றன என்று சொன்னால், உடனடியாக அதைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் புதிய வடிவம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக புத்தகங்கள் காணாமல் போயிருக்கின்றன என்று சொல்வதைவிட, எந்தப் புத்தகம் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று மாற்றுத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பெரும்பாலான உறுப்பினர்கள் உணவருந்த சென்றிருக்கிறார்கள். நானும் உணவருந்திவிட்டு வந்துவிட்டேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உணவு சாப்பிட்டுவிட்டாரா, இல்லையா என்பது தெரியவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): அவர் கொஞ்சம் தாமதமாகத்தான் சாப்பிடுவார்.

திரு. சு. குணசேகரன்: உணவு சாப்பிட்டுவிட்டு வந்து பேசினால் பரவாயில்லை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.